## ஆகஸ்ட் – 26

**"அன்பு தயவுள்ளது. "** - 1கொரி 13 : 4

கர்த்தருடைய ஜனங்களுக்கு தாங்கள் பார்க்கிற எல்லா எளிய ஜனங்களிடத்திலும் குணவிசேஷத்திலுள்ள அவர்களுடைய குறையை அவர்களுக்கு எடுத்துச் சொல்வதைவிட தெருவில் சந்திக்கிற எல்லா அறியாயஞ்செய்கிறவர்களையும் கண்டனம் செய்வது அதிக அவசியமாக செய்ய வேண்டிய ஒரு காரியமல்ல. மரியாதையான குணம் எப்பொழுதும் கிறிஸ்தவ குணத்தின் ஒரு பாகமாக இருக்கிறது. உலகத்தாரில் அது நாகரிகத்தன்மையாய் இருக்கலாம். ஆனால் கிறிஸ்தவனில் அது வெறும் வெளித்தோற்றம் மட்டுமல்லாமல், ஜீவ ஆவியாகிய அன்பின் வழியாக அபிவிருத்தி செய்யப்பட்ட இருதயத்தின் உண்மையான மனோபாவத்தைக் குறிக்கிறது. அன்பு, சாந்தம், பொறுமை, தயவு முதலியவைகளுக்கு வழி நடத்துகிறது. கீழ்ப்படியாமையின் விஷயத்திலும் கூட அது பட்சமில்லாத ஒரு வார்த்தையைச் சொல்லவும் தயங்கும். கடமை அனுமதிக்கும் வரை, அதைத் தவிர்க்கும்.

**- Z ’03, 153(R 4 3194)**

மொழி பெயர்க்கப்பட்ட வார்த்தை "அன்பு " இங்கே தன்னலமற்ற நல்லெண்ணத்தைக் குறிக்கிறது. இது கடமை நல்லெண்ணத்துக்கு வித்தியாசமானது. அன்பு நல்லெண்ணம். நல்ல அடிப்படையான உண்மைகளிலுள்ள (தத்துவங்களிலுள்ள) மகிழ்ச்சியின் அடிப்படையில் தகுந்த பாராட்டையும், இருதயத்தின் ஒற்றுமையையும், அனுதாபம் அல்லது இரக்கத்தையும், தியாகத்தையும் அளிப்பதில் மகிழ்ச்சி அடைகிற நல்லெண்ணம். இது கடமைக்கு வேறானது. நல்ல அடிப்படையான உண்மையிலும் (தத்துவத்திலும்), குணத்திலுமுள்ள நன்மையானதைத் தகுந்தவிதமாக பாராட்டி, அடிப்படை உண்மையிலும், குணத்திலுமுள்ள நன்மையானதை முன்னேறச் செய்வதில் மகிழ்ச்சி அடைகிறது. நல்ல அடிப்படையான உண்மைகளுக்கு நல்ல தத்துவங்களுக்கு மாறாக நடத்தப்படுகிறவர்களிடமும் அல்லது இவைகளுக்கு இணக்கமில்லாதவர்களிடமும் அனுதாபங்காட்டி அல்லது இரக்கப்பட்டு, இந்த நிலைமைகளிலிருந்து அவர்களை மீட்க உதவி செய்வதில், இது மகிழ்ச்சியடைகிறது. ஆகையால் இது மற்றவர்கள் ஆசீர்வதிக்கப்படுவதற்காக அவர்கள் சார்பில் தயவின் செயல்களை திட்டமிடவும் செய்யவும் இது தயாராகவுள்ள நிலையில் இருக்கிறது. மரணபரியந்தம் தியாகம் செய்து மற்றவர்களுக்கு ஆசீர்வாதங்களைக் கொடுப்பதில் இது விடாமுயற்சியுடன் இருக்கிறது. இதுதான் தயவு.

**- P ’26, 84.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**நீதி 10:12; 17:19; 19:22; 1பேது 4:8; மத் 5:44,45,48; 25:34,36,40,45; லூக் 6:35; ரோம 12:10; கலா 5:6,22,23; எபே 4:32; கொலோ 3:12-14; 1தெச 4:9; 2தெச 1:3; 1தீமோ 1:5; 1பேது 3:8; 4:8; 2பேது 1:7; 1யோவா 3:16,17.**

**கோபுர வாசிப்பு : Z ’14, 77 (R 5417)**

**வினாக்கள் : இந்த வாரம் அன்பு நிறைந்ததாயிருந்ததா? சந்தர்ப்பங்கள், தோற்றங்கள், நோக்கங்கள், பலாபலன்கள் எவை?**